**வாசிக்க**: **தானியேல்** 6:1-14

**தேவனை உண்மையாக நேசிப்பவன் தானியேல்**.

மேதியனாகிய தரியு ராஜா ஆட்சிக்கு வந்ததும், ராஜ்ஜியத்தை ஆள அநேக அதிகாரிகளையும் பிரதானிகளையும் ஏற்படுத்தினான். அவர்களில் தானியேல் ஞானமுள்ளவனாக கண்டதால், அவனை எல்லார் மேலும் தலைவனாக்க யோசித்தான். இதை அறிந்த மற்ற பிரதானிகள் பொறாமை கொண்டு, தானியேலிடத்தில் குற்றம் கண்டு பிடிக்க பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் கிடைக்காததால் ராஜாவிடத்தில் வந்து, எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று ராஜ்யத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனைபண்ணி ராஜாவிடம் முத்திரை போடவைத்தார்கள். தானியேலோ இதை அறிந்தும் தினமும் மூன்றுமுறை எருசலேமை நோக்கி ஜெபித்து தேவனை ஆராதித்தான். உடனே இதை குற்றமாக ராஜாவிடம் சொல்லி தானியேலை சிங்கெபியிலே தூக்கி போட்டார்கள்.

**கேள்வி**:

தானியேல் ராஜாவின் அரண்மனை அதிகாரம் கட்டளைகளெல்லாம் அறிந்தும் ஏன் அரச கட்டளைகளை மீறி ஜெபித்தார்.?

**பதில்**:

தானியேல் பாபிலோனில் இருந்தாலும், ராஜாவின் அரண்மனையில் வேலை செய்து கொண்டிருந்தாலும், தான் முதலில் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு ஊழியக்காரன் என்பதை மறக்கவில்லை. ஆகவேதான் சட்டம் நிறைவேற்றி, கையொப்பம் இட்டார்கள் என அறிந்தும் தைரியமாக தேவனுக்கடுத்த காரியங்களை செய்ய துணிந்தான். இந்த உலகத்தில் நாம் வாழும்போது நமக்கு மேலே தேவன் தாமே சிலரை அதிகாரியாக வைப்பதால் நாம் எல்லாவற்றிலும் அவர்களுக்கு கீழ்படிய வேதம் சொல்லுகிறது. ஆனால் கர்த்தருக்கடுத்த காரியங்களிலோ கர்த்தருக்கே நாம் கட்டுபட்டிருப்பதை தானியேல் அறிந்திருந்ததால் கட்டளையை பற்றி கவலைபடவில்லை. ஏன் தன் உயிரை கூட பெரியதாக எண்ணவில்லை. ஆகவே தான் மறைந்துகொண்டு தேவனை ஆராதிக்காமல் வெளியரங்கமாக ஜெபித்தான். ஆனால் பிசாசினால் வழிநடத்தப்பட்ட மனிதர்கள் அவனை அழிக்க இதையே ஒரு காரணமாக்கினார்கள். தன் உயிரே போனாலும் கர்த்தருக்கடுத்த காரியங்களில் அவருக்கே கீழ்படிவேன் என தீர்மானித்து செயல்பட்ட தானியேலுக்கு சிங்ககெபியில் என்னநடந்தது என நாளை பார்ப்போம். இன்று நாம் தேவன்மேல் வைத்த அன்பு எப்படிப்பட்டது என ஆராய்நது பார்க்கலாமா..? என் ஜீவனை இழக்க நேரிட்டாலும் அவரை ஆராதிப்பதை, அவரிடம் ஜெபிப்பதை நிறுத்தமாட்டேன் என ஒரு தீர்மானம் எடுக்கலாமா...!

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர் 8 :39

**ஜெபம்**

சர்வ வல்லமையுள்ள தேவனே உமக்கு ஸ்தோத்திரம். இன்றைக்கு கற்ற பாடத்தின் படி ஜெபிப்பதை நிறுத்த மாட்டோம். இத் தீர்மானத்தில் உறுதியாயிருப்போம். ஆமென்